நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No.29/2024

<u>அ.சா: 2 (LW 2)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : காளியப்பன் | | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

03.08.2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
-----------------------------------------------------------------

(எதிரி ஆஜர் )

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் <u>11.31</u>

நான் ஆண்டிபட்டி தாலுகா நல்லமுடிபட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 விசாலாட்சி எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி ஈஸ்வரனை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர் ஆவார். எதிரி ஈஸ்வரன் தனது மகள் திருமணத்திற்காக என்னிடம் பணம் கேட்டிருந்தார். நான் என்னிடம் பணம் இல்லை என்று கூறியதால் எனக்கும் அவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது. அதனால் என் மீது முன்விரோதம் கொண்டு தவறுதலாக நான் வரும்போகும் போதெல்லாம் அவரது மனைவியை நான் வை த்திருப்பாக கூறி என்னை அடிக்கடி டார்ச்சர் செய்து வந்தார். 13.05.2023 ம் தேதி எங்கள் ஊர் கோவில் திருவிழாவின் போது காலை 11.30 மணியளவில் நான் பூசாரியாக இருப்பதால் கன்னிமார் கோவிலில் சாமி

கும்பிட்டுவிட்டுபத்ரகாளியம்மன் கோவிலுக்கு ஊர்க்காரர்களுடன் சம்பத் டீ கடை அருகே நான், எனது மனைவி, செல்வமுருகன், குமார், பெத்துராஜ், காட்டுராஜா மற்றும் ஊர்க்காரர்களுடன் மேற்கூறிய இடம் அருகே வந்துகொண்டிருந்தபோது எதிரி ஈஸ்வரன் அங்கு வந்து எனது மனைவி பிரிந்ததற்கு நீ தான்டா காரணம் என்று கூறி தேவிடியா மகனே இதோடு செத்து தொலைடா என்று கூறி அவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் எனது இடதுபக்க கீழ் முதுகில் இடுப்பு அருகில் என்னைக் குத்தினார். நான் சத்தம்போட்டவுடன் அருகில் இருந்தவர்கள் அங்கு வந்தனர். அவர்கள் எதிரியை விரட்டிப்பிடிக்க முயன்றபோது அவர் கத்தியுடன் தப்பிச் சென்றுவிட்டார். பின்னர் 108 ஆம்புலன்சிற்கு போலிஸ்காரர் பாண்டிவேல் ராஜ், செல்வம் ஆகியோர் போன் செய்தனர். ஆம்புலன்ஸ் வருவதற்கு தாமதம் ஆனதால் செல்வமுருகனும், குமாரும் பைக்கில் என்னை நடுவில் வைத்து தனியார் மருத்துவமனையான அய்யனார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து என்னை ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினர். ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது இடையே பிச்சம்பட்டி அருகே 108 ஆம்புலன்ஸ் வந்ததால் ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மயக்க நிலையில் இருந்தேன். முதலுதவி சிகிச்சை எனக்கு அ ளிக்கப்பட்டது. மேல்சிகிச்சைக்காக என்னை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு 38 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் ஆபரேசன் தியேட்டரில் இருந்தேன். எனது மனைவியிடம் போலிசார் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கத்தியால் தான் எதிரி ஈஸ்வரன் உன்னை தாக்கினாரா என்றால் அவர் பின்பக்கமாக முதுகில் குத்தியதால எனக்கு நிலைகுலைந்துவிட்டது. அதனால் கத்தி எ னக்கு அடையாளம் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

***எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு முன்வரவில்லை.***

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.03 18:30:08 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:03.08.2026